**கவனிக்க**.- *07.10.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1731 - 2011 නොවැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2011.11.04**

*1731 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | 128 |
| நானாவித அறிவித்தல்கள் | 129 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நொத்தாரிசுமார் பட்டியல்

## நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார் :

1. அஹங்கம, விஸ்கம் மாவத்தை, இல. 51, என்னுமிடத்தில் வதியும் திரு. தீயகஹா கம் ஆச்சாரிகே மனீதா மதுசங்க அவர்களை காலி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

2. கல்கிஸ்சை, நிலைய வீதி, இல. 30, (அலகு 55/3), ''மௌன்ட் பிளாசா தொடர்மாடி'' என்னுமிடத்தில் வதியும் செல்வி திலினி லசந்தி பண்டார அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

3. கொழும்பு 06, ஹெவ்லொக் வீதி, இல. 557 1/ 2, என்னுமிடத்தில் வதியும் திரு. கணகசபை அருலம்பலம் விமலேந்திரராஜா அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் தமிழ் மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

4. கொழும்பு 07, ஹோட்டன் பிளேஸ், இல. 108/ 11, என்னுமிடத்தில் வதியும் திருமதி அமிலா ரீடா ஆட்டிகல அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

5. இரத்தினபுரி, குட் செட் வீதி, இல. 112, என்னுமிடத்தில் வதியும் திரு. சூரியதாச பிராக்மனகே விசான் ரவிந்த மாத்ரிபால அவர்களை இரத்தினபுரி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

6. மத்தேகொட, மத்தேகொட வீடமைப்புத்திட்டம், இல. 1F21, என்னுமிடத்தில் வதியும் திரு. தயானந்த விக்ரம எதிரிசூரிய அவர்களை பாணந்துறை நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

7. புலத்சிங்கள, அரச சேவையாளர் கிராமம், இல. 89, என்னுமிடத்தில் வதியும் செல்வி பினுபமா உச்சித்தானி வீரசிங்க அவர்களை களுத்துறை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

8. பண்டாரகம, பாணந்துறை வீதி, இல. 58, என்னுமிடத்தில் வதியும் செல்வி பத்திரகே தினுசா நில்மினி பெரேரா அவர்களை களுத்துறை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

9. மெதபாத்த, ஜம்புரலிய, பன்சல வீதி, த பினான்ஸ் வத்தை, இல. 81/4, என்னுமிடத்தில் வதியும் திருமதி திலேசா தர்சனி மன்டாவல கங்கானமகே அவர்களை பாணந்துறை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

10. நுகேகொடை, பழைய கெஸ்பேவ வீதி, இல. 96/ 32, என்னுமிடத்தில் வதியும் செல்வி தோன வருணிசிரிமா பட்டுகஹாகே அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

11. அத்துருகிரிய, கொட்டாவ வீதி, இல. 418, என்னுமிடத்தில் வதியும் திரு. வேயாலி முதியன்சேலாகே சந்தன ஜயதிஸ்ச அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

12. வத்தளை, ஹுனுபிட்டிய, ஜயா மாவத்தை, இல. 361, என்னுமிடத்தில் வதியும் திருமதி அன்னக்காரகே உமேசி ஜரங்க பெரேரா அவர்களை கம்பஹா நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

13. உமேய்யா, தம்பிட்டிய வீதி, ''ஜயமின்ன'', என்னுமிடத்தில் வதியும் திரு. சமரகோன் முதியன்சேலாகே அருண தர்மபிரிய சமரகோன் அவர்களை குருநாகலை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

14. மாவத்தகம, மாரலந்த, ''வெலிவிட்ட நிவாச'', என்னுமிடத்தில் வதியும் திரு. ஹேரத் முதியன்சேலாகே கெமுனு மத்தும பண்டார கருணாரத்ன அவர்களை குருநாகலை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு 7,
19.09.2011.

11-64/ 1

---

## நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார் :

1. நுகேகொடை, பெபிலியான வீதி, இல. 98/3, என்னுமிடத்தில் வதியும் செல்வி அன்டோனிட் சித்ராணி மயந்தி ஜயசூரிய அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

2. மாலபே, பொத்து-அரவ்வ வீதி, கீல்ஸ் வீடமைப்புத் திட்டம், இல. 03 என்னுமிடத்தில் வதியும் செல்வி ஹர்சா சியந்தி ஜயதிலக்க அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

3. எலஹெர, இல. 30/1, என்னுமிடத்தில் வதியும் செல்வி கங்க பிராக்மன முதியன்சேலாகே அஸ்வெத்துமே கெதர விந்யா திலானி திலக்கரத்ன அவர்களை பொலன்னறுவை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு 07,
19.09.2011.

11-64/ 2

# நானாவித அறிவித்தல்கள்

## புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூல மொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த ''புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கம் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. களுத்துறை மாவட்ட புலத்சிங்கள பிரதேச செயலாளர் அலுவலக பிரிவில் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக ஊக்குவித்தல் ;

2. சுயமுயற்சியும் பங்குபற்றலும் அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தை மேம்படுத்துவதும், குடும்ப அபிவிருத்திக்காக அதை பயன்படுத்திக் கொள்வதும் ;

3. விவசாயம், தொழில் மற்றும் வியாபார துறையில் அபிவிருத்தியை ஏற்படுத்தி, செயற்திட்டம் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், நடாத்திச்செல்லல் மற்றும் மேம்பாட்டிற்காக மக்களை திசைப்படுத்தல் ;

4. கிராமிய மக்களை சேமிப்பிற்காகவும், சிக்கனத்திற்காகவும் ஊக்கப்படுத்தல் ;

5. இளைஞர்களை இலாபம் ஈட்டும் வேலைத்திட்டத்திற்காக ஊக்கப்படுத்தல். வியாபார திறமை அபிவிருத்திக்காக கைக்கொடுத்தல். கடன் வேலைத்திட்டம் மற்றும் பயிற்சித் திட்டங்கள் திட்டமிடல் ;

6. கூட்டுத்தாபன நோக்கத்தை வெற்றிகொள்வதற்காக ஈடு பட்டுள்ள உறுப்பினர்களின் குடும்ப பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக புலமைப்பரிசில், நிதி மற்றும் பரிசில்கள் வழங்குதல் ;

7. அதிகார பிரதேசத்துள் மக்களின் சுகாதாரம், சுகநலன், போசாக்கு மேம்பாட்டிற்கு அனுசரனை வழங்குதல் மற்றும் விளையாட்டுத் திறமையை அபிவிருத்திக்காக ஊக்கப் படுத்தல் ;

8. மக்களின் சமய, கலாசார மற்றும் கல்வி அபிவிருத்திக்காக தேவைப்படும் வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தல் ;

9. சமுகத்திற்காக நலன்புரி உதவிகளை வழங்குதல் ;

10. கூட்டுத்தாபனத்தின் நோக்க மேம்பாட்டை நிறைவேற்றிக் கொள்வதற்காக தேவை என எதிர்பார்க்கப்படும் புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், செய்திப்பத்திரிகைகள் அச்சடித்தல், பிரசுரித்தல் மற்றும் பங்கிடல் ;

பிறவும்.

விதுர விக்ரம நாயக,
பாராளுமன்ற உறுப்பினர்,
களுத்துறை மாவட்டம்.

11-92

---

## பாராளுமன்றத்தின் இளைப்பாறிய பணியாளர் சங்கத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ராஜீவ விஜேசிங்க, பா.உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''பாராளுமன்றத்தின் இளைப்பாறிய பணியாளர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூல மொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(அ) உறுப்பினர்கள் மத்தியில் பரஸ்பர மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(ஆ) உறுப்பினர்களினதும் அவர்களின் துணையினதும் அல்லது அவர்களில் தங்கியுள்ள பிள்ளைகளினதும் நலன்களுக்குச் சாதகமான முயற்சிகளை மேற்கொள்ளலும் ;

பிறவும்.

ராஜீவ விஜேசிங்க,
பாராளுமன்ற உறுப்பினர்.

11-154

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2011***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 04.11.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.10.2011 |
| | | வெள்ளி | 11.11.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.10.2011 |
| | | வெள்ளி | 18.11.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.11.2011 |
| | | வெள்ளி | 25.11.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.11.2011 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 02.12.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.11.2011 |
| | | வெள்ளி | 09.12.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.11.2011 |
| | | வெள்ளி | 16.12.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.12.2011 |
| | | வெள்ளி | 23.12.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.12.2011 |
| | | வெள்ளி | 30.12.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.12.2011 |

***அட்டவணை - 2012***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 06.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.12.2011 |
| | | வெள்ளி | 13.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.12.2011 |
| | | வெள்ளி | 20.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.01.2012 |
| | | வெள்ளி | 27.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.01.2012 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*